பக்கங்கள் 19

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 மாசி 01 வியாழக்கிழமை 15.02.2024 அதிர்வு 199

## “தர்மமே மறுபடியும் வெல்லும்”

**சிறீதரன் இப்படி பதிவு**

“தர்மத்தின் வாழ்வுதனை சூது கவ்வும் மீண்டும் தர்மமே வெல்லும்.” 04

# தேசிய மாநாடு, நிர்வாகிகள் தெரிவு அனைத்துக்குமே தமிழரசில் தடை!

**திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இன்று கட்டாணை**



இவர்தான் வழக்குத் தாக்கல் செய்த சந்திரசேகரம் பரா







(ந.லோகதயாளன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக சிவஞானம் சிறீதரனைத் தெரிவு செய்த கட்சியின் பொதுக் குழுக் கூட்டத்தின் முடிவுகள், புதிய நிர்வாகி கள் தெரிவுக்காக கடந்த 27 ஆம் திகதி நடைபெற்ற பொதுச் சபைக் கூட்டத்தின் முடிவுகள், எதிர்வரும் 19 ஆம் திகதி திங்கட்கிழமை திருகோணமலையில் நடத்த உத்தேசிக்கப்பட்ட கட்சியின் தேசிய மாநாடு அனைத்துக்கும் திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இரண்டு வார காலத் தடை விதித்து இன்று கட்டாணை பிறப்பித்துள்ளது. 04

## தமிழரசின் தேசிய மாநாட்டுக்கு யாழ். நீதிமன்றும் தடை விதிப்பு



(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டை எதிர்வரும் 19ஆம் திகதி திங்கட்கிழமை திருகோணமலையில் நடத்தும் முயற்சிக்கு எதிராக யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றமும் இன்று இடைக்கால கட்டாணை வழங்கித் தடை விதித்தது.

கட்சியின் முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் பீற்றர் இளஞ்செழியன் தாக்கல் செய்த வழக்கை விசாரித்த 04



## கட்சிக்காக மன்றில் நான் வாதாடுவேன்

**ஜனாதிபதி சட்டத்தரணி சுமந்திரன் திட்டவட்டம்**

“இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு எதிராகவும், கட்சியின் பொதுக் குழுக் கூட்டங்களின் முடிவுகளுக்கு எதிராகவும், யாழ்ப்பாணம், திருகோணமலை நீதிமன்றங்களில் தாக்கல் செய்யப்பட்டு, இடைக்காலக் கட்டாணைகள் வழங்கப்பட்டுள்ள வழக்குகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் கட்சியின் தலைவர்கள் கேட்டுக் கொண்டால் அவர்களுக்காக நீதிமன்றங்களில் முன்னிலையாகி அந்த வழக்குகளுக்கு எதிராக வாதாடுவேன்.” 04




# அநுரகுமார ஜனாதிபதியானால் நாட்டை ஆள முடியாமல் தற்கொலை செய்வாராம்

## மொட்டுக் கட்சி எம்.பி. கருத்து

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றி பெறும் பட்சத்தில் நாட்டை ஆள முடியாமல் தற்கொலை செய்துகொண்ட ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார் என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜே.வி.பி. இரட்டை நிலைப்பாட்டைப் பின்பற்றி வருகின்றது என்பது தற்போது உறுதியாகின்றது. அக்கட்சியினரால் போலிக் கருத்துக்களே சமூகத்தில் விதைக்கப்படுகின்றன. எனவே, உண்மையைச் சொல்லி நாட்டைப் பொறுப்பேற்குமாறும், பொய்களை நிறுத்துமாறும் நாம் கோருகின்றோம்.

இலங்கை வரலாற்றில் மன்னர்களுக்குப் பிறகு, அழுத்தம் காரணமாக நாட்டை ஆள முடியாமல் ஓடிய தலைவர்தான் கோட்டாபய ராஜபக்ஷ. அநுரகுமார திஸாநாயக்க ஜனாதிபதி ஆகமாட்டார் என்பது உறுதி. சிலவேளை கனவிலாவது அவர் ஜனாதிபதியானால் அழுத்தம் தாங்க முடியாமல் தற்கொலை செய்துகொண்ட ஜனாதிபதியாக வரலாற்றில் இடம்பிடிப்பார். ஏனெனில் அவர் அந்தளவுக்குப் பொய்யுரைக் கின்றார்.

அத்துடன், இந்தியாவுக்குப் பயணம் மேற்கொண்டு ஜே.வி.பியின் கொள்கைகளை அநுரகுமார திஸாநாயக்க காட்டிக்கொடுத்துள்ளார்." - என்றார்.

# யாழில் ஐஸ்கிறீமுக்குள் தவளை

## சுகாதாரப் பரிசோதகர்களால் விசாரணை

யாழ்ப்பாணத்தில் குளிர்களி (ஐஸ்கிறீம்) விற்பனை நிலையம் ஒன்றில் விற்கப்பட்ட குளிர்களியில் தவளை ஒன்று காணப்பட்ட சம்பவம் தொடர்பில் சுகாதாரப் பரிசோதகர்களால் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

செல்வச்சந்நிதி முருகன் கோயில் சூழலில் உள்ள குளிர்களி விற்பனை நிலையம் ஒன்றில் நேற்று ஒருவர் குளிர்களி ஒன்றை வாங்கிய வேளை அதனுள் தவளை ஒன்று காணப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து உத்தியோகத்தர்கள் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் தற்போது அதிகளவான வெப்பமான காலநிலை நிலவுவதால் சந்நிதி ஆலயத்துக்குச் செல்வோர் குளிர்பானங்களை அருகில் உள்ள உணவங்கள் மற்றும் குளிர்களி விற்பனை நிலையங்களிலேயே கொள்வனவு செய்து பருகி வருகின்றனர்.

அந்நிலையில் குறித்த உணவகங்கள் மற்றும் குளிர்களி விற்பனை நிலையங்களின் சுகாதாரம் மற்றும் நீரின் தூய்மை என்பவை தொடர்பில் சுகாதாரப் பரிசோதகர்கள் கவனம் செலுத்தி, சோதனை நடவடிக்கையில் ஈடுபட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.






# யாழில் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வு

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தின் வருடாந்த பொலிஸ் பரிசோதனை நிகழ்வும் பொலிஸ் அணிவகுப்பு நிகழ்வும் இன்று காலை இடம் பெற்றது

பரிசோதனை நிகழ்வில் யாழ்ப்பாணம் பிராந்திய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜெகத் நிசாந்த பரிசோதனைகளை முன்னெடுத்தார்.

அணிவகுப்பு நிகழ்வில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸாரின் சீருடைகள், ஆயுதங்கள், வாகனங்கள், பரிசோதிக்கப்பட்டதோடு பொலிஸாருக்கான விசேட அறிவுரைகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் யாழ். பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஜருள், யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.





# பழுகாமம் தேசிய சேமிப்பு வங்கியின் 52 ஆவது ஆண்டு நிறைவில் மரதன்!



(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு பழுகாமம் தேசிய சேமிப்பு வங்கியின் 52 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு மரதன் ஓட்டப் போட்டி நடத்தப்பட்டுள்ளது.

மக்களிடம் சேமிப்பு தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாகவும் தேசிய சேமிப்பு வங்கியின் 52 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டும் நேற்று (14) இந்த நிகழ்வு நடத்தப்பட்டது.

திருப்பழுகாமத்தில் ஆரம்பமாகி பெரியபோரதீவு ஊடாக மீண்டும் பழுகாமம்வரை மரதன் ஓட்டம் இடம்பெற்றது.

நிகழ்வில் பழுகாமம் தேசிய சேமிப்பு வங்கியின் முகாமையாளர், உத்தியோகத்தர்கள் மற்றும் விளையாட்டு வீரர்கள் கலந்துகொண்டனர். வெற்றி பெற்ற வீரர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### தேசிய மாநாடு...

இவ்விடயம் தொடர்பான வழக்கு இன்று முற்பகல் திருகோணமலை மாவட்ட நீதிபதி மாணிக்கவாசகர் கணேசராஜா முன்னிலையில் எடுத்துக்கொள்ளப்பட்டபோது 14 நாள்களுக்குச் செயற்படும் வகையில் மேற்குறித்த இடைக்காலக் கட்டாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இவ்வழக்கை திருகோணமலை சாம்பல்தீவு – கோணேசபுரியைச் சேர்ந்த சந்திரசேகரம் பரா என்பவர் சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமார் ஊடாகத் தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டத்தரணி ஐஸ்வர்யா சிவகுமாரின் அனுசரணையுடன் ஜனாதிபதி சட்டத்தரணி ஜெப்ரி அழகரட்ணம் மற்றும் சட்டத்தரணி புரந்தரன் ஆகியோர் இன்று முன்னிலையாகி வாதிட்டனர்.

கடந்த 21 மற்றும் 27 ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்டங்கள் சட்டத்துக்கு முரணானவையும், செல்லுபடியற்றவையும் என வாதம் முன்வைக்கப்பட்டது.

எனவே, அந்த இரண்டு பொதுச் சபை கூட்டங்களிலும் மேற்கொள்ளப்பட்ட தெரிவுகள் சட்டத்திற்கு முரணானவையும், செல்லுபடியற்றவை எனவும் வாதம் முன்வைக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் அமைப்பு விதி அனுமதிக்கின்ற தொகையை விட அதிக எண்ணிக்கையான உறுப்பினர்கள் பொதுக் குழுக் கூட்டங்களில் பங்குபற்றி இந்தத் தெரிவுகளின் போது வாக்களித்துள்ளமையால் குறித்த கூட்டம் சட்ட முரணானது எனவும் இன்று நீதிமன்றில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தச் சமர்ப்பணங்களின் அடிப்படையில் எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெற இருந்த கட்சியின் தேசிய மாநாட்டிற்கு திருகோணமலை மாவட்ட நீதிமன்றம் இரு வாரங்களுக்கு இடைக்காலத் தடை உத்தரவு விதித்துள்ளது. அத்தோடு முன்னைய பொதுக் குழுக் கூட்டங்கள் இரண்டிலும் எடுக்கப்பட்ட முடிவுகள், தீர்மானங்கள் போன்றவற்றுக்கும் இதே தடைக் கட்டாணை வழங்கப்பட்டது.

இந்த வழக்கு மீண்டும் எதிர்வரும் பெப்ரவரி மாதம் 29ஆம் திகதி திறந்த நீதிமன்றில் அழைக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

அத்துடன் இந்த வழக்கில் மாவை சேனாதிராஜா, சிவஞானம் சிறீதரன், எம்.ஏ.சுமந்திரன், சண்முகம் குகதாசன், ப.சத்தியலிங்கம், சீ.யோகேஸ்வரன், சே.குலநாயகம் ஆகிய தமிழரசுக் கட்சியின் ஏழு முக்கியஸ்தர்கள் எதிராளிகளாகப் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளது.

### தமிழரசின்...

யாழ். மாவட்ட நீதிமன்றம் இந்த உத்தரவை இன்று வழங்கியது.

சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் வழக்காளிக்காக முன்னிலையாகி வாதாடினார்.

கட்சியின் பிரமுகர்களான மாவை சேனாதிராஜா, சேவியர் குலநாயகம், ப.சத்தியலிங்கம், சி.சிறீதரன், ச.குகதாசன் ஆகியோருக்கு எதிராக இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

அதேசமயம் கடந்த மாதம் 21 ஆம் திகதி மற்றும் 27ஆம் திகதி திருகோணமலையில் நடைபெற்ற பொதுக் குழுக் கூட்ட முடிவுகளை இடைநிறுத்துமாறு உத்தரவிடக் கோரியும், அக்கூட்ட முடிவுகளை இரத்துச் செய்யுமாறு அறிவிக்கக் கோரியும் இன்னொரு மனுதாரர் சார்பில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு பெரும்பாலும் நாளை வெள்ளிக்கிழமை நீதிமன்றத்தில் எடுத்துக்கொள்ளப்படக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

### கட்சிக்காக...

– இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் யாழ்ப்பாணம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன் 'மாலை முரசு'க்குத் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இந்த வழக்குகள், கட்டாணைகள் குறித்து இன்று காலையிலேயே கொழும்பில் கேள்விப்பட்டேன். திருகோணமலை வழக்கில் என் பெயரும் எதிராளியாகக் குறிப்பிடப்பட்டுள்ளதாக இப்போது அறிந்துள்ளேன். ஏனைய எதிராளிகளான எமது கட்சியின் சகாக்கள் கேட்டுக்கொண்டால் அவர்களுக்காகவும் இந்த வழக்கில் முன்னிலையாகி கட்சிக்காக வாதாடுவேன்." – என்றார்.

### தர்மமே...

– இவ்வாறு தனது 'பேஸ்புக்'கில் இன்று பிற்பகல் பதிவிட்டுள்ளார் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவான சிவஞானம் சிறீதரன்.

தமிழரசுக் கட்சியின் புதிய நிர்வாகிகள் தெரிவு மற்றும் கட்சியின் தேசிய மாநாடு ஆகியவற்றுக்கு திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் மாவட்ட நீதிமன்றங்கள் இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பித்துள்ள நிலையிலேயே சிறீதரன் எம்.பி. 'பேஸ்புக்'கில் மேற்கண்டவாறு பதிவிட்டுள்ளார்.

# சஜித் ஆட்சியில் விடிவு பிறக்கும்



## திகாம்பரம் நம்பிக்கை

“சஜித் பிரேமதாஸ தலைமையிலான அரசில் மலையக மக்கள் நிச்சயம் சிறு தோட்ட உரிமையாளர்களாக்கப்படுவர். ரணசிங்க பிரேமதாஸவைப் போன்று அவரது புதல்வரான சஜித் பிரேமதாஸவும் எமது மக்களுக்கு நன்மை செய்வார் என நம்புகின்றோம்.”

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் பிரதித் தலைவர் பழனி திகாம்பரம் எம்.பி. தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தி தலைமை அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தம் கைசாத்திடும் நிகழ்வில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

“200 ஆண்டுகளாக மலையக மக்கள் கூலித் தொழிலாளர்களாகவே வாழ்ந்து வருகின்றனர். ஆனால், அந்த மக்களுக்கு வீட்டு உரிமையோ, நில உரிமையோ இல்லை. நல்லாட்சி அரசில் எம்மால் ஓரளவு வீட்டு உரிமை மற்றும் நில உரிமை பெற்றுக்கொடுக்கப்பட்டது. எனினும், அதனை எம்மால் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமை ஏற்பட்டது.

எனவே, எதிர்காலத்தில் சஜித் பிரேமதாஸ தலைமையில் அமைக்கப்படவுள்ள அரசில் அந்த மக்களை நிச்சயமாக சிறு தோட்ட உரிமையாளர்களாக்குவதோடு, அவர்களுக்கு அதற்கான காணி உரிமையும் பெற்றுக்கொடுக்கப்படும்.

மலையக மக்களின் குடியுரிமை பறிக்கப்பட்டபோது, அதனை மீளப் பெற்றுக்கொடுத்த ரணசிங்க பிரேமதாஸவைப் போன்று அவரது புதல்வரான சஜித் பிரேமதாஸவும் எமது மக்களுக்கு நன்மை செய்வார் என்று நம்புகின்றோம்.

ஜனாதிபதித் தேர்தலில் நிச்சயம் அவர் வெற்றி பெறுவார். அதன் பின்னர் நில உரிமை மற்றும் சிறு தோட்ட உரிமையாளர்களுக்கான உரிமையைப் பெற்றுக் கொடுப்பதாக வழங்கியுள்ள வாக்குறுதியை நிச்சயம் நிறைவேற்றுவோம். மக்கள் எம் மீது நம்பிக்கை வைக்க வேண்டும். நல்லாட்சி அரசைப் போன்று இனிவரும் காலங்களிலும் நாம் வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவோம்.” – என்றார்.

# வாகன விபத்தில் கணவன் மரணம்; மனைவி படுகாயம்

கண்டி – குருநாகல் வீதியில் ஜீப் ரக வாகனம் ஒன்று மோட்டார் சைக் கிளுடன் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

வேகக் கட்டுப்பாட்டை இழந்த நிலையில் குறித்த ஜீப், மோட்டார் சைக்கிள் மீது மோதியுள்ளது என்று பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த 43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்துள்ளார்.

அத்துடன் உயிரிழந்த நபரின் மனைவி படுகாயமடைந்த நிலையில் கண்டி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# காதலர் தினத்தில் காதலி சந்திக்க வர மறுத்தமையால் காதலன் உயிர்மாய்ப்பு

இறக்குவானை பிரதேசத்தில் காதல் துயரத்தால் இளைஞர் ஒருவர் காதலர் தினத்தில் உயிரை மாய்த்துக் கொண்டுள்ள சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

இறக்குவானையைச் சேர்ந்த 21 வயதுடைய இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த இளைஞரின் தாயார் வெளிநாட்டில் பணிபுரிபவர் எனவும், அவரது தந்தை கொழும்பில் பணிபுரிந்து வருகின்றார் எனவும், மேலும் இரு சகோதரிகளுடன் மேற்படி இளைஞர் வீட்டில் வசித்து வந்தார் எனவும் தெரியவந்துள்ளது.

“எனது சகோதரர், யுவதி ஒருவருடன் காதல் தொடர்பில் இருந்து வந்த நிலையில், சம்பவத்துக்கு முன்தினம் இரவு தனது காதலியுடன் தொலைபேசியில் நீண்ட நேரம் பேசிக் கொண்டிருந்தார். அந்த அழைப்பின் பின்னர் சகோதரர் சத்தமாக அழுதார். நாளை (14) காதலர் தினத்தைக் கொண்டாட இறக்குவானைக்கு வருமாறு தனது காதலியை எனது சகோதரர் பலமுறை அழைப்பதைக் கேட்டேன்.” – என்று இறந்தவரின் சகோதரி ஒருவர் வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

இறப்பதற்கு முன் மேற்படி இளைஞர் தனது கையைப் பிளேடால் வெட்டிக் கொண்டுள்ளார் என்றும் மரண விசாரணை அதிகாரி தெரிவித்தார்.

இந்த மரணம் தற்கொலை எனத் தெரிவித்த மரண விசாரணை அதிகாரி சடலத்தைப் பிரேத பரிசோதனைக்காக கஹவத்தை ஆதார வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்குமாறும் உத்தரவிட்டார்.

**நமது கருத்து**
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# சுமந்திரனின் வழக்கு

இலங்கையின் முக்கிய ஒரு சட்ட விவகாரத்துக்காக உயர் நீதிமன்றத்தின் கதவைத் தட்டி இருக்கின்றார் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன்.

அவர் சார்ந்த கட்சி விடயம் அல்ல இது. சட்டத்தை யாக்கும் நாடாளுமன்றச் செயற்பாடு தொடர்பான ஒரு விவகாரத்துக்காக - தேசிய ரீதியான அநீதிக்கு எதிராக - உயர்நீதிமன்றத்துக்குச் சென்றிருக்கின்றார் அவர்.

அவரே ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்தான். நாட்டின் சட்டத்தை யாக்கும் உறுப்பினர்களில் அவரும் ஒருவர். சட்டத்துறை தொடர்பில் ஆழ்ந்த புலமை மிக்கவராக தேசிய ரீதியில் மதிக்கப்படுபவர்.

தானும் அங்கத்தவராக இருக்கும் நாடாளுமன்றம் சட்டத்தை யாக்கும் விடயத்தில் பெரும் தவறை - தீங்கை - இழைத்திருப்பதாக அவர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் மனு மூலம் முறையிட்டு, அதற்கு நிவாரணம் கோரியிருக்கின்றார்.

நிகழ்நிலைக் காப்புச் சட்டத்தை யாக்கும் விடயத்தில் நாடாளுமன்றம் சரியாக நடக்கவில்லை, நியாயமாக - முறையாக - நடக்கும்படி முறையிட்டோம். ஆனால் நாடாளுமன்றத்தை ஒழுங்கு முறையாக வழிநடத்த வேண்டிய சபாநாயகர் தவறிழைத்து விட்டார் என்ற சாரப்பட தமது மனுவில் குற்றம் சுமத்தியிருக்கின்றார் சுமந்திரன் எம்.பி.

வழக்கமாகச் சட்டச் சிக்கல் நிறைந்த வழக்குகளில் வாதாடும் சட்டத்தரணியாக நீதிமன்றத்தில் களமிறங்கும் ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன். இங்கு தாமே மனுதாரராகச் சட்டக்களம் புகுந்திருக்கின்றார். இந்த மனு உயர் நீதிமன்றத்தில் எடுக்கப்படும் போது அவரே தமது மனுவுக்காக முன்னிலையாகி வாதிடுவாரா என்பது தெரியவில்லை.

ஆனால் இது இலங்கையின் சட்ட வரலாற்றில் மிக முக்கிய வழக்காக அமையப் போவது நிச்சயம்.

நாடாளுமன்ற விவகாரங்களில் உயர் நீதிமன்றம் தலையிட முடியுமா, தலையிடுமா என்பதற்கான அமிலச் சோதனை வழக்கு இது.

நாடாளுமன்ற விவகாரங்கள் தனித்துவமானவை. அவற்றை கையாளும் தனிச் சிறப்புரிமைகளும் சாத்தியமும் உரித்தும் சபாநாயகருக்கே உரியது. அதில் யாரும் தலையிட முடியாது என்பது பொதுவான ஒழுங்கு.

ஆனால் அந்த உரித்து இருக்கின்றது என்பதற்காக ஒரு பிரஜையின் நியாயமான அடிப்படை உரிமைகளை மீறும் வகையில் தன்பாட்டில் எதேச்சாதிகாரமாக - நீதி முறைமைக்கு மாறாக - நாடாளுமன்றமும் அதை வழிநடத்தும் சபாநாயகரும் செயல்படும்போது அதனை உயர்நீதிமன்றம் பார்த்திருக்குமா, அனுமதிக்குமா என்ற கேள்விகள் எல்லாம் உள்ளன.

ஒரு சட்டத்தை நாடாளுமன்றம் உருவாக்குவது தொடர்பில் வழிமுறைகள், சட்ட ஏற்பாடுகள், விதிகள், ஒழுங்குகள் உண்டு. அவை எல்லாவற்றையும் மதிக்காமல், மீறி, நாடாளுமன்றமோ சபாநாயகரோ நடந்து கொண்டால், அது விடயத்தில் நாடாளுமன்றத்திற்கும் சபாநாயகருக்கும் உள்ள சிறப்புரிமைகள் செல்லுபடியாகுமா என்ற வினாவும் இதில் எழுகின்றது.

ஒரு சட்டத்தை யாக்கும் விடயத்தில் உயர்நீதிமன்றத்தின் வழிகாட்டுதல்களை - முடிவுகளை - தவறான முறையில் நாடாளுமன்றமோ, சபாநாயகரோ உதாசீனம் செய்ய முடியாது.

அப்படி உதாசீனம் செய்யப்பட்டதான குற்றச்சாட்டு - அதுவும் உயர்நீதிமன்றத் தீர்ப்பைப் புறந்தள்ளி சட்டத்தைப் யாத்த தான குற்றச்சாட்டு மிகவும் பாரதூரமானது.

ஒரு சட்டமூலம் நிறைவேறியதாக சபாநாயகர் சான்றுரைத்தால் அந்தச் சட்டத்தின் செல்லுபடி தன்மை குறித்து எந்த நீதிமன்றத்திலும் சவாலுக்கு உட்படுத்த முடியாது என்று அரசமைப்புத் தெளிவாக கூறுகின்றது.

அதற்காக, உயர்நீதிமன்றப் பரிந்துரைகளை புறந்தள்ளி, சட்டத்தை யாக்கும் முறைமைகளை மீறி, ஒரு சட்டம் நிறைவேற்றப்பட்டதாக சபாநாயகர் சான்றுரைத்தால் அந்தச் சட்ட விடயத்தில் இந்த அரசமைப்பு ஏற்பாடு செல்லுபடியாகுமா, சபாநாயகரின் செயற்பாட்டை உயர்நீதிமன்றம் கேள்விக்கு உட்படுத்த முடியாதா என்பவை எல்லாம் இந்த வழக்கில் சோதனைக்கு உள்ளாகும் என எதிர்பார்க்கலாம்.

முதலில் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை உயர்நீதிமன்றம் விசாரணைக்கு ஏற்கும் முடிவை எடுக்குமா என்பதைப் பார்க்க வேண்டும். அண்மைக்காலத்தில் இத்தகைய உணர்வுபூர்வமான சட்டப் பிரச்சினைகள் நிறைந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதா என்ற விசாரணைகளை ஒரு வாரம், பத்து நாள்கள் தொடர்ந்து செவிமடுத்த பின்னர், காரணம் கூறாமலேயே அந்த மனுக்களை விசாரணைக்கு ஏற்பதில்லை என்ற உத்தரவு வழங்கும் ஒரு பண்பியல்பு நமது உயர் நீதிமன்றத்தினால் வெளிப்படுத்தப்பட்டு வருகின்றமையும் கவனிக்கப்பட வேண்டும்.

சுமந்திரனின் வழக்கு வரும் செவ்வாய் அல்லது வியாழக்கிழமை உயர்நீதிமன்றத்தில் எடுக்கப்படும் போது விடயம் தெளிவாகும் என எதிர்பார்க்கலாம்.



# முல்லைத்தீவு, அனுராதபுரம் மாவட்டங்களில் வீடமைப்பு!

## திட்டங்களை ஆரம்பித்தது தேசிய வீடமைப்புக் குழு

(அஷ்ரப் ஏ சமத்)

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் சட்டத் தரணி ரஜிவ் சூரியாராச்சி மற்றும் பொது முகாமையாளர், பொறியியலாளர் குழு யாழ்ப்பாணம் மற்றும் முல்லைத்தீவு, அனுராதபுரம் ஆகிய மாவட்ட தேசிய வீடமைப்பு அலுவலகங்களுக்கு சென்று அங்கு பல்வேறு வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தனர்.

அத்துடன் யாழ்ப்பாணம் மாவட்டத் தில் 106 குடும்பங்களுக்கு வீட்டுரி மைப் பத்திரங்கள் வழங்கப்பட்டன. மேலும் வீடற்ற யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்கு வீடுகளை அமைக்க வீடமைப்புக் கடன் வழங்கப் பட்டது.

இந் நிகழ்வில் தேசிய வீடமைப்பு பிரதித் தலைவர், பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், பிரதிப் பொது முகா மையாளர்கள் மாவட்ட மேலதிக அரச அதிபர்கள் கலந்து கொண்டனர்.

அத்துடன் இந்தக் குழு முல்லைத் தீவு மாவட்ட வீடமைப்புக் அலுவல கத்துக்கு விஜயம் செய்தது. அங்கு கடமை புரியும் ஊழியர்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகள், அவர்களின் பதவி உயர்வு, நிரந்தரமாக்கல் போன்ற விடயங்களுடன் மாவட்டத்தில் மேற் கொள்ளும் எதிர்கால வீடமைப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பிலும் மாவட்ட முகாமையா ளர்கள், ஊழியர்களுடன் கலந்துரை யாடி நடவடிக்கை மேற்கொள்ளப்பட் டது.

அதே வேளை அனுராதபுர வீட மைப்பு அலுவலகம் ஊடாக 46 குடும்பங்களுக்கு வீட்டுரிமைப் பத்திரம் வழங்கப்பட்டது. அத்துடன் வீடற்ற 115 குடும்பங்களுக்கு தத்தமது காணி யில் வீடுகளை நிர்மாணிக்க வென வீடமைப்புக் கடன் வழங்கப்பட்டது.





# சம்மாந்துறை மக்களின் பிரச்சினைகள் ஆராய்வு!

(எம்.எம்.றம்ஸீன்)

சம்மாந்துறை மக்களின் பொதுவான தேவை மற்றும் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக மஜ்லிஸ் ஷூறா கவுன்சில் உறுப்பினர்களால் விரிவாகக் கலந் துரையாடப்பட்டது.

ஆசிரியர்கள் இடமாற்றம் சம்பந்த மாக ஒரு தீர்க்கமான முடிவை எட்டுவ தற்காகக் கருத்துக்களும் தெரிவிக்கப் பட்டன.



இதில், கடந்த வாரம் ஆசிரியர் இடமாற்றம் சம்பந்தமாகவும் , பெண் ஆசிரியைகளின் பொருத்தமற்ற இடமாற்றம் சம்பந்தமாகவும் உரிய நடவடிக்கை எடுப்பதற்காக ஜனாதிப தியின் செயலாளருடன் அண்மையில் பேசிய விடயங்கள் சம்பந்தமாக தெரி விக்கப்பட்டது.

இந்த இடமாற்றம் குறித்து நடைபெற இருக்கும் அம்பாறை மாவட்ட அபி விருத்தி குழு கூட்டத்தில் காத்திரமான முடிவுகளை பெற்று பாதிக்கப்பட்ட ஆசி ரியர்களுக்கு நம்பிக்கையூட்டும் முடிவை பெற நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினரும் தேசிய காங்கிரஸின் தலைவ ரும் மாவட்ட அபிவிருத்தி குழுவின் இணைத் தலைவருமான ஏ.எல்.எம். அதாவுல்லா இதன்போது தெரிவித்தார்.

# வொலிவேரியன் கிராமத்தின் அபிவிருத்திக் குழுவின் கூட்டம்





(அஸ்ஹர் இப்றாஹிம்)

சாய்ந்தமருது வொலிவேரியன் கிராம அபிவிருத்தி குழுவின் கூட்டம் பல்தேவை கட்டடத் தொகுதியில் கடந்த புதன் கிழமை (14) இடம்பெற்றது.

பொலிவேரியன் கிராமத்தில் இருக்கும் அனைத்து சங்கங்கள் அமைப்புகளையும் பிரதிநிதித்துவப்படுத்தும் பொதுவான அமைப்பின் நெறிப்படுத்தலின் கீழ், சாய்ந்தமருது பொலிஸ் மக்கள் பாதுகாப்பு பிரிவின் வழிகாட்டலின், கிராம போதை ஒழிப்பு குழு, எம். எஸ். காரியப்பர் வித்யாலய பாடசாலை அபிவிருத்திக் குழு , மஸ்ஜிதுல் ஹிஜ்ரா பள்ளிவாசல் பரிபாலன சபை ஆகியவற்றின் ஒழுங்குபடுத்தலின் கீழ் இடம்பெற்றது.

சாய்ந்தமருது பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி உதவி பொலிஸ் அத்தியட்சகர்சகர் ஏ .எல். எம்.றவூப் , கிராம சேவை அதிகாரி எம். எம். மாஹிர், சமுர்த்தி உத்தியோகத்தர் எம். ஐ .எம். ஜாபீர் , கிராம மக்கள் பாதுகாப்பு பொறுப்பு அதிகாரி மக்புல் , பாடசாலை அதிபர் எம். எஸ். ஆரிப் , பதினாறாம் பிரிவினுடைய பொலிஸ் அதிகாரி திலீபன் , சமூக நலன் கொண்டவர்கள் , அமைப்புக்கள் சங்கங்களினுடைய தலைவர், செயலாளர், பொருளாளர்கள் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர்.

# குருகொடை முஸ்லிம் ம.வி. பவள விழா






(அஸ்ஹர் இப்றாஹிம்)

அக்குரணை, குருகொடை முஸ்லிம் மகா வித்தியாலயத்தின் பவள விழா, பாடசாலையின் அதிபர் அஷ்ஷேக் எஸ்.எச்.ஹம்சி ஹாஜியார் தலைமையில் அண்மையில் பாடசாலையின் கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன், நாடாளுமன்ற உறுப்பினர் ஹலீம், நிப்போன் நிறுவனத்தின் உரிமையாளர் அல்ஹாஜ் நிஸைஹர் ஹாஜியார், கட்டுகஸ்தொட்டை வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி சுஜீவ என்.வீரசுந்தர ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

விஷேட பேச்சாளராக அஷ்ஷேக் அனஸ் மொஹமட் நளீமி கலந்து கொண்டார். மக்கள் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினர்களான ஹம்ஜாட் ஹாஜியார், ரியாஸ் ஹாஜியார், கட்சியின் முக்கியஸ்தர்களான றம்சான் ஹாஜியார், நளீஸ் ஹாஜியார் உட்பட பிரமுகர்களும், கல்வித் திணைக்கள அதிகாரிகளும் பங்கேற்றனர்.

# பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட அட்டாளைச்சேனை மக்களுக்கு உதவி

(அஸ்ஹர் இப்றாஹிம்)




பொருளாதார ரீதியில் பின்தங்கிய நிலையில் உள்ள வருமானம் குறைந்த மற்றும் வாழ்வாதார ரீதியில் பாதிப்புற்ற பெண் தலைமை தாங்கும் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு உலருணவுப் பொதி வழங்கும் நிகழ்வு செக்டோ ஶ்ரீலங்கா சமூக சேவை நிறுவனத்தின் ஏற்பாட்டில் அண்மையில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா சமூக சேவை நிறுவனத்தின் தலைவர் சட்டத்தரணி ஏ.எல்.நியாஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் சமூக சேவை உத்தியோகத்தர் ஏ.ஜி.அஸ்ரத், செக்டோ ஶ்ரீ லங்கா நிறுவனத்தின் உப தலைவர் எம்.எச். றம்சான், பொருளாளர் ஏ.எல்.றிம்ஸான், அமைப்பாளர் ஏ.எல்.றியாஸ், ஊடக இணைப்பாளர் ஏ.ஆர்.எம்.றிம்சான், உறுப்பினர் ஏ.எல்.எம். புஹாரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.



# மூதூர் வலயத்தின் தேசிய நிகழ்வு

(எம்.எம்.நௌபீக்)

மூதூர் வலயத்தின் தேசிய நிகழ்வான இலவச சீருடை மற்றும் இலவச பாடநூல் வழங்கும் தேசிய நிகழ்வு வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்தில் நேற்று (14) அதிபர் நடேசப்பிள்ளை தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனும், கௌரவ விருந்தினராக மூதூர் வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி இசற்.எம்.எம். நளீமும் சிறப்புவிருந்தினர்களாக மூதூர் வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.



# பள்ளிவாசலுக்கு நிதி உதவி !



(நூருல் ஹுதா உமர்)

அட்டாளைச்சேனை அல் ஜென்னா பள்ளிவாசலின் அபிவிருத்தி வேலைத் திட்டத்துக்குக் கிழக்கின் கேடயத்தின் தலைவரும், அக்கரைப்பற்று அனைத்து பள்ளிவாசல்கள் சம்மேளன முன்னாள் தலைவருமான எஸ். எம். சபீஸ் நிதியுதவி வழங்கியுள்ளார்.

பள்ளிவாசல் நிர்வாகத்தின் அழைப்பின் பேரில் அங்கு விஜயம் மேற்கொண்ட கிழக்கின் கேடயத்தின் தலைவர் எஸ். எம். சபீஸ் பள்ளிவாசலின் தற்போதைய நிலைமை தொடர்பாக அவதானித்தார்.

புனித நோன்புக்கு முன்பு பள்ளிவாசலின் உட்கட்டமைப்பு நிறைவு செய்ய வேண்டுமென நிர்வாகத்தினர் கோரிக்கை விடுத்தனர். அதற்கமைவாகப் பள்ளிவாசல் தரையை செப்பனிடுவதற்காக நிதி வழங்கப்பட்டது.

நிதி வழங்கும் நிகழ்வில் பள்ளிவாசல் தலைவர் எம்.பி. நஸீர், பள்ளிவாசல் பொருளாளரும் முஸ்லிம் காங்கிரஸின் அட்டாளைச்சேனை மத்திய குழு தலைவருமான எஸ்.எல்.ஏ.ஹலீம் ஆகியோர் கலந்து கொண்டனர்.



# ஆசிரியர்கள் இடமாற்றப் பட்டியலை இரத்து செய்யக் கோரி ஆர்ப்பாட்டம்!

## தீர்வு பெற்று தருவதாக நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் உறுதி

**(கே. எ. ஹமீட், பாறுக் ஷிஹான், அஸ்ஹர் ஆதம், எஸ்.அஷ்ரப்கான்)**

அண்மையில் கிழக்கு மாகாணக் கல்வி திணைக்களம் வெளியிட்ட ஆசிரியர் இடமாற்ற பட்டியலை இரத்து செய்ய கோரி கல்முனை மற்றும் சம்மாந்துறை கல்வி வலய ஆசிரியர்களால் அம்பாறை மாவட்ட செயலகம் முன்னால் மாபெரும் ஆர்ப்பாட்டம் நேற்று (14) நடத்தப்பட்டது.

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர எச்.எம்.எம். ஹரீஸை ஆசிரியர்கள் நேற்று நேரடியாகச் சந்தித்துத் தங்களுடைய பிரச்சினைகளை எடுத்துக் கூறினர்.

அதனைக் கருத்தில் கொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் இந்த



விடயத்துக்கு நியாயமான தீர்வு ஒன்றைப் பெற்றுத்தருவார் என்று உறுதி அளித்தனர்.

விரைவில் இந்த இடமாற்றம் முடிவுக்கு வரும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் உறுதி அளித்தார்.

அம்பாறை மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிப்பு குழுக் கூட்டம் நேற்று அம்பாறை கச்சேரியில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# சர்ச்சைக்குரிய ஆசிரியர் இடமாற்றத்தை மாவட்டத்துக்குள் முன்னெடுக்கத் தீர்மானம்




**(ஏயெஸ் மௌலானா, எம்.எப்.நவாஸ்)**

அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் வெளி மாவட்டங்களுக்கான இடமாற்றங்களை இரத்து செய்து, அவர்களுக்கான இடமாற்றங்களை அந்த மாவட்டத்துக்குள்ளேயே மேற்கொள்வது என்று அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அம்பாறை மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று புதன்கிழமை (14) மாவட்ட செயலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் பங்கேற்புடன் இடம்பெற்றது.

கிழக்கு மாகாண கல்வி அமைச்சால் மேற்கொள்ளப்பட்ட ஆசிரியர் இடமாற்றம் காரணமாக பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள அம்பாறை மாவட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பிலும் இந்தக் கூட்டத்தில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு ஆராயப்பட்டது.

அம்பாறை மாவட்டத்தில் ஆசிரியர் வெற்றிடங்கள் அதிகம் காணப்படுகின்ற நிலையில், மாவட்டத்துக்கு வெளியே ஆசிரியர்கள் இடமாற்றப்படுவதை இரத்து செய்து விட்டு, அவர்களை மாவட்டத்திற்கு உட்பட்ட வலயங்களுக்குள் இடமாற்ற வேண்டும் என்று மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர்களான ஏ.எல்.எம். அதாவுல்லா, பைசல் காசிம், எச்.எம்.எம்.ஹரீஸ், எஸ்.எம்.எம். முஷாரப் ஆகியோர் வலியுறுத்தினர்.

இதனை ஆமோதித்த ஆளுநர் செந்தில் தொண்டமான், கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் உயர் அதிகாரிகளின் கருத்துகளையும் கேட்டறிந்து கொண்டார்.

இதன்படி சம்மந்தப்பட்ட ஆசிரியர்களை மாவட்டத்தினுள் உள்ளக இடமாற்றம் செய்து வெற்றிடங்களை நிரப்புவது என்று தீர்மானிக்கப்பட்டது.



# தாம்போதி நிர்மாணம் குறித்து ஆராய செயலாளர் களவிஜயம்!

(வி.ரி. சகாதேவராஜா)

சம்மாந்துறை வீரமுனை அலவாக் கரை வீதியில் உள்ள இரண்டு தாம் போதிகளின் நிர்மாணம் குறித்து ஆராய கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அமைச்சின் செயலாளர் எம். கோபால ரத்தினம் நேரடி விஜயமொன்றை நேற்று முன்தினம் மேற்கொண்டிருந்தார்.

இதன்போது குறித்த இரண்டு தாம் போதிகள் பூர்த்தி செய்யப்பட வேண் டிய வேளையில் பூர்த்தி செய்யபடாது உள்ளமை குறித்து ஆராய்ந்தார்.

இதனை பார்வையிட்ட அவர் ஒப்பந் தக்காரர் இதை ஒருவார காலத்தில் முடிவுறுத்த வேண்டும் என்று ஆலோ சனை வழங்கினார்.

முன்னதாக அவர் கல்முனை பிராந் திய வீதி அபிவிருத்தி திணைக்கள அலுவலகத்துக்கு விஜயம் செய்தார்.

கல்முனை பிராந்திய வீதி அபிவி ருத்தி திணைக்களத்தின் நிறைவேற்று பொறியியலாளர் எந்திரி எம் எம் .முனாஸ் செயலாளரை மாலைசூட்டி வரவேற்றார்.



# சாய்ந்தமருது இளம் தொழிலதிபர் நீதிக்கான மய்யத்தால் கௌரவிப்பு!

(எஸ்.அஷ்ரப்கான்)

இந்தியா, திருச்சியில் சிறந்த வர்த் தக முகாமைத்துவ பணிப்பாளர்களுக் கான ஆசிய விருது - 2023, பெற்ற நீதிக்கான மய்யத்தின் பொருளாளர், இளம் தொழிலதிபர் அப்துல் அஸீஸ் அஷ்ரஃப் அலி, நீதிக்கான மய்யத்தால் கௌரவிக்கப்பட்டார்.

இந்த நிகழ்வு நீதிக்கான மய்யத்தின் தலைவர் சட்டமுதுமாணி ஷஃபி எச். இஸ்மாயில் தலைமையில் சாய்ந்த மருது வொலிவேரியன் கலாச்சார மத் திய நிலையத்தில் அண்மையில் இடம்பெற்றது.

இதில் நீதிக்கான மய்யத்தின் செயலாளர் கலாநிதி றியாத் ஏ.மஜீத், பிரதித் தலைவர் யூ.கே.எம்.றிம்சான்



உள்ளிட்ட நீதிக்கான மய்யத்தின் பிரதி நிதிகள் கலந்து கொண்டனர்.

இதன்போது ஆசிய விருது பெற்ற இளம் தொழிலதிபர் அப்துல் அஸீஸ் அஷ்ரஃப் அலி நீதிக்கான மய்யத்தின் பிரதிநிதிகளால் பொன்னாடை போர்த்தி, நினைவுச் சின்னம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டார்.



# மட்டக்களப்பு மாவட்டத்தின் ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்!

மட்டக்களப்பு மாவட்டத்தின் இந்த ஆண்டுக்கான முதலாவது ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம், மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் தலைவரும் இராஜாங்க அமைச்சருமான சிவ நேசதுரை சந்திரகாந்தன் தலைமையில் மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது கடந்த ஆண்டு இந்த மாவட்டத்தில் 9953.11 மில்லியன் ரூபா செலவில் நடைமுறைப்படுத்தப்பட்ட 1162 அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாக மீளாய்வு செய்யப்பட்டது.

இவ்வாண்டு பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்ட நிதியில் இருந்து 287 மில்லியன் செலவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அபிவிருத்தித் திட்டங்களுக்கான அனுமதிகளும் வழங்கப்பட்டிருந்தன.

மேலும் கரையோரம் மற்றும் வாவியை அண்டிய பகுதிகளில் கண்டல் தாவரங்களை நடுதல், மட்டக்களப்பு வாவியில் மிதக்கும் உல்லாசப் படகு சேவையை ஆரம்பித்தல், வவுணதீவுப் பிரதேசத்தில் சூரிய மின்சக்தி உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்தல், புளுக்குணாவ குளத்தில் மீன்குஞ்சு வளர்ப்பை ஆரம்பித்தல், மற்றும் கிராமிய வீதி அபிவிருத்தித் திட்டத்தை நடைமுறைப்படுத்தல் போன்றவற்றுக்கான அனுமதிகள் வழங்கப்பட்டன.

இதுதவிர தனியார் கல்வி நிறுவனங்களால் நடத்தப்படும் மேலதிக வகுப்புகளில் தரம் 10 தொடக்கம் க.பொ.த. உயர்தரம் தவிர்ந்த ஏனைய வகுப்புகளை ஞாயிற்றுக்கிழமைகளில் தடை செய்வது தொடர்பான விசேட கூட்டம் ஒன்றை நடத்தவும் தீர்மானிக்கப்பட்டது.

இந்த மாவட்டத்தில் சட்டவிரோத மது உற்பத்தி மற்றும் மதுவிற்பனை தொடர்பாகக் கலால் திணைக்களம், பொலிஸாருடன் இணைந்து உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்வது தொடர்பாகவும் தீர்மானிக்கப்பட்டது.

விசேடமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட வயல் நிலங்களுக்கான இழப்பீடுகளை மீள்பரிசீலனை செய்து அதற்கான இழப்பீட்டுத் தொகையை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுக்கவும், பொது மக்கள் மின்சாரக் கட்டணம் செலுத்தத் தாமதமாவதால் ஏற்படும் மின் துண்டிப்புச் சலுகைக் காலத்தை நீடிப்பது தொடர்பாக மின்சக்தி எரிசக்தி அமைச்சருக்கு கோரிக்கை விடுப்பது தொடர்பிலும் இதன்போது தீர்மானிக்கப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் ஜஸ்டினா முரளிதரன் ஏற்பாட்டில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் ஒருங்கிணைப்புக் குழுவின் இணை தலைவர்களான கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான், இராஜாங்க அமைச்சர் எஸ்.வியாழேந்திரன் மற்றும் ஏ.எல்.எம்.அத்தாவுல்லா மற்றும் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான இரா. சாணக்கியன், அலிசாஹிர் மௌலானா, மாவட்ட செயலக உயரதிகாரிகள், பிரதேச செயலாளர்கள், மாவட்டத்தின் சகல திணைக்களங்களின் தலைவர்கள், அதிகாரிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# உதைபந்தாட்டத்துக்கு அபுதாபிக்கு பயணமாகும் வடக்கு மாணவர்கள்!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

றெனோன் உதைப்பந்தாட்ட அக்கடமி நடத்தும் 12 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் பங்கேற்கும் உதைபந்தாட்ட போட்டியில் வட மாகாணத்திலுள்ள பல பாடசாலையிலிருந்தும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வசாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த றிஸ்பன், யாழ். சென். பற்றிக்ஸ் கல்லூரியைச் சேர்ந்த சபிந்தன், கிளிநொச்சி மத்திய கல்லூரியைச் சேர்ந்த தனுஷ், மயிலங்காடு ஸ்ரீ முருகன் வித்தியாலயத்தைச் சேர்ந்த ஹனீஸ் ஆகிய மாணவர்களே இவ்வாறு தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அபுதாபியில் எதிர்வரும் 22 திகதி வரை இந்த உதைபந்தாட்டப் போட்டி நடைபெறவுள்ளது.



இந்த மாணவர்களுக்கான பயிற்சிகளை உதைப்பந்தாட்ட பயிற்சிவிப்பாளர் எம்.டனிஸ்ரன் வழங்கியுள்ளார்.

# கல்முனை ஜீனியஸ் வி.கழக கிரிக்கெட் சீருடை அறிமுகம்



(அஸ்ஹர் இப்றாஹிம்)

கல்முனை ஜீனியஸ் விளையாட்டுக் கழகத்தின் கிரிக்கட் அணிக்கான புதிய சீருடை அறிமுக நிகழ்வு கழகத்தின் ஆயுள்காலத் தலைவர் சட்டத்தரணி ஏ.எம்.றொஸான் அக்தர் தலைமையில் நிந்தவூர் எம்.ஏ.சி. உள்ளக அரங்கில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம அதிதியாக சீருடைக்கான அனுசரணையாளரும் கட்டார் இன்ஸா ட்ரேடிங் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஆர்.எம்.இஹ்ஸான் கலந்து கொண்டு கழக சீருடையை அறிமுகம் செய்து வைத்தார்.

இந்த நிகழ்வுக்காக இணை அனுசரணை வழங்கிய நிதா ஹொலிட்டுவேர்ஸ் நிறுவனத்தின் நிறைவேற்று பணிப்பாளர் ஜே.எம்.ஸப்னிஸ், ஜமாலியா ஜுவல்ஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் எம்.எம்.சஜான், கழகத்தின் வளர்ச்சிக்காக என்றும் ஆதரவு வழங்கிக் கொண்டிருக்கும் எம்.நஜாத் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.





# சிறப்புற நடந்த சம்மாந்துறை பிரதேச உள்ளகக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி

(சர்ஜுன் லாபீர், ஐ.எல்.எம் நாஸீம், (எம்.எம்.றம்ஸீன்)

சம்மாந்துறை பிரதேச செயலக நலன்புரி அமைப்பினால் நடத்தப்பட்ட உள்ளக கிரிக்கெட் சுற்றுப்போட்டி, உதவிப் பிரதேச செயலாளர் யு.எல்.அஸ்லம் தலைமையில் அண்மையில் (13) சம்மாந்துறை பொது விளையாட்டு மைதானத்தில் சிறப்பாக நடைபெற்றது.

உத்தியோகத்தர்களின் உடல் ஆரோக்கியத்தையும், மன வலிமையையும், திறன் வளர்ச்சியையும் ஏற்படுத்தும் நோக்கில் இப்போட்டி வருடாந்தம் நடத்தப்பட்டுவருகின்றது.

இதன்படி இந்த ஆண்டுக்கான சுற்றுபோட்டி 5 ஓவர்களைக் கொண்டதாக அமைந்த அதேவேளை, அணிக்கு தலா 7 பேர் கொண்ட 8 அணிகள் கலந்து கொண்டன.

இச் சுற்றுப் போட்டிக்கு அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மத் ஹனீபா மற்றும் அம்பாறை மாவட்ட செயலக பிரதம பொறியியலாளர் ஏ.பி சாஹீர் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இச்சுற்றுப்போட்டியின் இறுதியாட்டத்தில் நிர்வாகக் கிளையும் வெளிக்களக் கிளையும் மோதின.

இதில் நிர்வாகக் கிளை 43 ஓட்டங்களால் வெற்றி பெற்று சம்பியனாகத் தெரிவு செய்யப்பட்டது.













# மருதமுனை கடப்பாஸ் எவ்.சியுடனான உதைபந்தாட்டம்

## அம்பாறை மாவட்ட பொலிஸ் அணி சம்பியனானது

**(ஏ.எல்.எம்.ஷினாஸ்)**

அம்பாறை மாவட்ட பொலிஸ் அணிக்கும் மருதமுனை கடப்பாஸ் எவ்.சி அணிக்கும் இடையில் நடைபெற்ற கண்காட்சி உதைபந்தாட்டப் போட்டி மருதமுனை மசூர் மௌலானா விளையாட்டு மைதானத்தில் அண்மையில் (12) நடைபெற்றது.

இலங்கை பொலிஸ் அணிகளுக்கு இடையிலான பொலிஸ் வெற்றிக் கிண்ண சுற்றுப்போட்டி நடைபெறவுள்ள நிலையில், அதில் பங்கேற்கவுள்ள அம்பாறை மாவட்ட பொலிஸ் அணிக்குரிய 'ஜெர்சி'யை வழங்கி வைக்கும் முகமாக இந்தக் கண்காட்சி உதைப்பந்தாட்டப் போட்டி நடைபெற்றது.

ஆரம்பத்திலிருந்து இறுதிவரை மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இப்போட்டியில் அம்பாறை பொலிஸ் அணி 3:2 என்ற கோல்கள் கணக்கில் கடப்பாஸ் எவ்.சி அணியை வென்று சம்பியனாகத் தெரிவானது.

இந்நிகழ்வில் மருதமுனை டில்மானி பேக் ஹவுஸ் நிறுவனத்தின் உரிமையாளர் ஏ.ஏ.ஆதம்பாவா ( பாறூக்) பொலிஸ் அணிக்கான 'ஜெர்சி'யை வழங்கி வைத்தார்.

அம்பாறை மாவட்ட சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஜே.எச்.எம். என். ஜெபத்ம, பிரதம அதிதியாகக் கலந்து கொண்டார்.

அம்பாறை மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் எஸ்.பி.எச். செனவிரத்ன, அக்கரைப்பற்று உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் ஏ.எஸ்.கே. பண்டார, கல்முனை உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் எச்.டி. எம்.எல்.புத்திக ஆகியோர் கௌரவ அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

சிறப்பு அதிதிகளாக கல்முனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி றம்சின் பக்கீர், பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஏ.எஸ்.கே.வீரசிங்க, அம்பாறை மாவட்ட பொலிஸ் விளையாட்டு பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஆர்.எம்.எஸ். சிசிர ஹேரத், முன்னாள் மாநகர சபை உறுப்பினர் ஏ.ஆர்.அமீர், தொழிலதிபர் ஏ.கே.ஏ. நளீர் உட்பட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.





# விவசாயிகள் போராட்டத்தால் 7 மாவட்டங்களில் இணைய சேவைக்கான தடை தொடர்ந்தும் நீடிப்பு



பஞ்சாப்-ஹரியாணாவின் ஷம்பு எல்லையில் 2 ஆவது நாளாக நேற்றும் ஒன்று திரண்ட விவசாயிகள் டில்லி நகரை நோக்கி பேரணியாக செல்ல முயன்றனர்.

இதையடுத்து, விவசாயிகளை தடுத்து நிறுத்திய பொலிஸார் கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், தடியடி நடத்தியும் கூட்டத்தை கலைக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இதனால், பொலிஸாருக்கும், போராட்டக்காரர்களுக்கும் இடையே பயங்கர தள்ளுமுள்ளு ஏற்பட்டது. விவசாயிகளின் போராட்டம் தீவிரமடையாமல் தடுப்பதற்காக, ஹரியாணாவின் அம்பாலா, குருஷேத்ரா, கைதால், ஜிந்த், ஹிசார் ஃபதேஹாபாத் மற்றும் சிர்சா ஆகிய 7 மாவட்டங்களில் இணைய சேவைக்கான தடை நீடிக்கப்பட்டுள்ளது. மேலும், எஸ்.எம்.எஸ். அனுப்புவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

12 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் நேற்றும் ஒன்று திரண்டு டில்லி மாநகருக்குள் நுழைய முயன்றதால் பொலிஸார் பல்வேறு தடுப்புகளை அமைத்து அவர்களை கட்டுப்படுத்தினர். இதையடுத்து, காஜிபூர் எல்லையில் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது.

இதனிடையே, பிரச்சினைகளுக்கு தீர்வு காண பேச்சுவார்த்தைக்கு வருமாறு பஞ்சாப் கிசான் மஸ்தூர் சங்கர்ஷ் கொமிட்டி, சன்யுக்த் கிசான் மோர்ச்சா மற்றும் விவசாய சங்க தலைவர்களுக்கு மத்திய அமைச்சர் அர்ஜுன் முண்டா அழைப்பு விடுத்துள்ளார்.

விவசாயிகளின் கோரிக்கைகளுக்கு தீர்வு காணும் வகையில் இன்று சண்டிகரில் பேச்சுவார்த்தை நடத்த மத்திய அரசு ஒப்புக்கொண்டுள்ளது. அதுவரையில், போராட்டத்தை முன்னெடுக்காமல் அமைதிகாக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த பேச்சுவார்த்தையில் மத்திய வேளாண் துறை அமைச்சர் அர்ஜுன் முண்டா, உணவு மற்றும் பொது விநியோகத் துறை அமைச்சர் பியூஷ் கோயல், உள்துறை இணையமைச்சர் நித்யானந்த் ராய் கலந்து கொள்ள உள்ளனர் என விவசாய சங்க தலைவர் சர்வண் சிங் பாந்தர் நேற்று தெரிவித்தார்.

விவசாயிகளின் டில்லி சலோ பேரணியின்போது நேற்று முன்தினம் போராட்டக்காரர்களுக்கும், போலிஸாருக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டது. அப்போது, கண்ணீர் புகை குண்டுகளை வீசியும், நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டும், தடியடி நடத்தியும் விவசாயிகளின் கூட்டத்தை பொலிஸார் கலைத்தனர். இதில், விவசாயி ஒருவர் படுகாயம் அடைந்தார்.

# இந்தியாவில் இருந்து வெளியேற சாந்தனுக்கு தற்காலிக கடவுச்சீட்டு!



இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைவழக்கில் ஆயுள் தண்டனைக் கைதிகளில் ஒருவரான சாந்தன் என்கிற சுதந்திரராஜாவிற்கு இந்தியாவில் இருந்து வெளியேறுவதற்கு மாத்திரம் தற்காலிக கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளது.

இதன்படி சென்னையில் உள்ள இலங்கை துணை உயர்ஸ்தானிகரகத்தினால் இந்த கடவுச்சீட்டு வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், 32 வருடகால சிறை தண்டனைக்கு பின்னர் விடுதலையாகி அவருக்கு நாடு திரும்புவதற்கு இலங்கை அரசாங்கம் அனுமதியளித்துள்ளது.

முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற சாந்தனுக்கு சென்னையில் உள்ள இலங்கைக்கான துணை உயர்ஸ்தானிகரகம் தற்காலிக பயண ஆவணத்தை வழங்கியுள்ளது என சென்னை மேல் நீதிமன்றத்தில் தமிழக அரசு அறிவித்திருந்தது.

இதேவேளை, இந்திய முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி கொலைக் குற்றவாளிகளாக தண்டனை பெற்ற நளினி மற்றும் ஸ்ரீ ஹரன் என்கிற முருகன் ஆகியோர், தங்களை லண்டனில் உள்ள தங்கள் மகளிடம் செல்ல அனுமதிக்கக்கோரி தாக்கல் செய்த மனுக்கள் நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

# குவைத்திலிருந்து படகில் தப்பிவந்த தமிழர்களின் விளக்கமறியல் நீடிப்பு



குவைத்தில் இருந்து படகில் மும்பைக்கு தப்பி வந்த 3 தமிழர்களை பொலிஸார் கைது செய்திருந்தனர்.

இந்த நிலையில், 3 தமிழர்களின் விளக்கமறியலை மேலும் நீடித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

தமிழ்நாட்டின் கன்னியாகுமரியை சேர்ந்த வினோத் அந்தோணி (வயது 29), சயா அந்தோணி அனீஷ் (வயது 29), ராமநாதபுரத்தை சேர்ந்த நிடிசோ டிடோ ஆகியோர் கடந்த 2 ஆண்டுகளுக்கு முன் வேலைக்காக குவைத் சென்றனர்.

3 பேருக்கும் அவர்களின் உரிமையாளர் முறையாக சம்பளம் கொடுக்கவில்லை. கடவுச்சீட்டையும் அவர் பறித்து வைத்து இருந்தார். 3 தமிழர்களும் தங்கள் நிலைதொடர்பாக அந்த நாட்டு பொலிஸார் மற்றும் தூதரகத்தில் முறைப்பாடு அளித்தும் பலன் கிடைக்கவில்லை.

இதனால், அவர்கள் மூவரும் கடந்த மாதம் 28 ஆம் திகதி உரிமையாளரின் படகில் குவைத்தில் இருந்து தப்பித்தனர். அவர்கள் சவுதி அரேபியா, கட்டார், துபாய், ஓமன், பாகிஸ்தான் கடல் வழியாக இந்தியாவின் மும்பை வந்தடைந்தனர்.

கடவுச்சீட்டு மற்றும் உரிய ஆவணங்கள் இல்லாமல் இந்தியா வந்த அவர்களை மும்பை பொலிஸார் கைது செய்தனர். 3 பேரும் பொலிஸ் காவலில் அடைக்கப்பட்டு இருந்தனர்.

பொலிஸ் காவல் முடிந்ததால் தமிழர்கள் 3 பேரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். அதைத்தொடர்ந்து 3 பேரையும் 14 நாள்கள் நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். பின்னர் 3 பேரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

## பயங்கரவாதம் எங்கு இருந்தாலும் பா.ஜ.க. அரசு அதனை அழிக்கும்

### அண்ணாமலை உறுதி



பயங்கரவாதம் எங்கு இருந்தாலும், அதை பா.ஜ.க. அழிக்கும் என கோவை குண்டுவெடிப்பில் உயிரிழந்தோருக்கான புஷ்பாஞ்சலி நிகழ்ச்சியில் பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

கோவையில் கடந்த 1998 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 14 ஆம் திகதி நடைபெற்ற தொடர் குண்டு வெடிப்பில் உயிரிழந்தவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில், பாஜக மற்றும் இந்து அமைப்புகள் சார்பில் ஆண்டுதோறும் புஷ்பாஞ்சலி நிகழ்ச்சி கடைபிடிக்கப்படுகிறது.

அதன்படி, ஆர்.எஸ்.புரம் டி.பி.சாலையில் நேற்று நடைபெற்ற நிகழ்வில், பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை உள்ளிட்ட கலந்து கொண்டு, உயிரிழந்தவர்களின் புகைப் படங்களுக்கு மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

இந்த நிகழ்வில், பா.ஜ.க. மாநில தலைவர் அண்ணாமலை பேசும் போது,

“எதிர்வரும் மக்களவை தேர்தல் கோவையின் பாதுகாப்புக்கான தேர்தல். தமிழகத்தில் மக்களுக்காக சேவை செய்கிறோம் என்று கூறும் கட்சிகள் ஒரே குரலில் குண்டு வெடிப்பு கைதிகளை விடுவிக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள். இதன் மூலம் வரும் தேர்தலில் வாக்கு எவ்வளவு முக்கியம் என்பதை மக்கள் உணர்ந்து கொள்ள வேண்டும்.

பா.ஜ.க. வேட்பாளர் வெற்றி பெற்றால் ஆர்.எஸ்.புரத்தில் நினைவுத் தூண் அமைக்கப்படும். கோவையை பாதுகாக்க என்.ஐ.ஏ. 2 ஆவது அலுவலகம் கோவைக்கு கொண்டுவரப்படும். பயங்கரவாத வேர், மூளை எங்கு இருந்தாலும் அதை பா.ஜ.க. அழிக்கும். 1998 ஆம் ஆண்டு குண்டு வெடிப்பு, கோவையை 20 ஆண்டுகள் பின்னோக்கி கொண்டு சென்றது. 2022 ஆம் ஆண்டு தாக்குதல் 10 ஆண்டுகள் பின்னோக்கி கொண்டு சென்றிருக்கிறது. இந்தியாவின் பாதுகாப்புக்கு மோடி தேவை.” – என்றார்.

## தி.மு.கவில் சிவகங்கை தொகுதியினை பெறுவதற்கு கரு.பழனியப்பன் முயற்சி



அமைச்சர் உதயநிதியிடம் இருக்கும் நெருக்கத்தை பயன்படுத்தி சிவகங்கை தொகுதியில் ஆசனைத்தை பெற திரைப்பட இயக்குநர் கருபழனியப்பன் காய் நகர்த்தி வருகிறார்.

மக்களவைத் தேர்தலில், கடந்த முறையைவிட கூடுதல் இடங்களில் தி.மு.க. போட்டியிட வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. இதனால், இந்த முறை எப்படியாவது சிவகங்கை தொகுதியை தி.மு.க.வுக்கு ஒதுக்க வேண்டுமென அக்கட்சியினர் குரல் கொடுக்க தொடங்கியுள்ளனர்.

சென்னையில் கடந்த ஜனவரி 29 ஆம் திகதி நடைபெற்ற தி.மு.க. தேர்தல் ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில், சிவகங்கை தொகுதியை தி.மு.கவுக்கு ஒதுக்க வேண்டுமென சிவகங்கை மாவட்ட நிர்வாகிகள் வலியுறுத்தினர்.

அதேநேரம், இந்த முறை கார்த்தி சிதம்பரத்துக்கு ஆசனம் வழங்கக் கூடாது என காங்கிரஸ் கட்சியில் முன்னாள் மத்திய இணை அமைச்சர் இ.எம்.சுதர்சன நாச்சியப்பன், முன்னாள் எம்எல்ஏகள் கே.ஆர்.ராமசாமி, சுந்தரம் ஆகியோர் தரப்பு போர்க்கொடி தூக்கியுள்ளது. இதனால் சிவகங்கை தொகுதியில் தி.மு.க. நேரடியாக களமிறங்க வாய்ப்பு உள்ளதாக அக்கட்சியினர் கூறி வருகின்றனர்.

இந்த தொகுதியை தி.மு.கவுக்கு ஒதுக்கும் பட்சத்தில், எப்படியாவது ஆசனத்தை பெற்று விட வேண்டும் என்று அமைச்சர் ரகுபதி மகன் அண்ணாமலை, சிவகங்கை மாவட்டத் துணைச் செயலாளர்கள் சேங்கை மாறன், ஜோன்ஸ் ரூசோ, மாநில மாணவரணி துணைச் செயலாளர் பூர்ணா சங்கீதா உள்ளிட்டோர் முயன்று வருகின்றனர். அதேபோல் செய்தி தொடர்பு மாநில இணைச் செயலாளர் ராஜீவ் காந்தி ராமநாதபுரம் அல்லது சிவகங்கை தொகுதியில் போட்டியிட முயற்சித்து வருகிறார்.

அந்த வரிசையில் காரைக்குடியைச் சேர்ந்த திரைப்பட இயக்குநர் கரு.பழனியப்பனும் சிவகங்கை தொகுதியை குறி வைத்துள்ளார். அண்மையில் சென்னையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கரு.பழனியப்பன் கருப்பு, சிவப்பு வேட்டி கட்டாத தி.மு.க–காரர் என்று அமைச்சர் உதயநிதி பேசியுள்ளார். உதயநிதியிடம் உள்ள நெருக்கத்தில் எப்படியும் சிவகங்கை தொகுதியில் ஆசனத்தை வாங்கி விடலாம் என கரு.பழனியப்பன் முயற்சித்து வருகின்றார் என கூறப்படுகிறது.



# அமெரிக்காவில் துப்பாக்கிச் சூடு ஒருவர் உயிரிழப்பு; 20 பேர் காயம்

அமெரிக்காவின் கன்சாஸ் நகரத்தில் இடம்பெற்ற பேரணி மீது நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளார். 20 இற்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

துப்பாக்கி சூடு நடத்திய மூன்று சந்தேகநபர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், காயமடைந்தவர்களில் 11 சிறுவர்களும் அடங்குகின்றனர் என சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணம் இதுவரையில் கண்டறியப்படாத நிலையில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

இந்தநிலையில், இந்த வருடத்தின் கடந்த ஆறு வாரங்களில் மாத்திரம் அமெரிக்காவில் 44 துப்பாக்கிச்சூட்டு சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

# காசாவில் உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் கோரிக்கையை முக்கிய நாடுகள் முன்வைத்துள்ளன

காசாவில் உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்தும் கோரிக்கையொன்றை அவுஸ்ரேலியா, கனடா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகள் கூட்டாக முன்வைத்துள்ளன.

ரபா மீதான தரைவழித் தாக்குதல்களை மேலும் தீவிரப்படுத்துவதாக இஸ்ரேல் அறிவித்துள்ள நிலையிலேயே, மேற்படி நாடுகள் இந்த கோரிக்கையினை முன்வைத்துள்ளன.

உடனடி போர் நிறுத்தத்தை வலியுறுத்தி அந்த நாடுகள் ஏற்கனவே கோரிக்கைகளை முன்வைத்திருந்தன.

இந்த நிலையில், தற்போது ரபா மீது இஸ்ரேல் வான்வழி மற்றும் கடல்வழி தாக்குதல்களை தீவிரப்படுத்தியுள்ளதாக அவுஸ்ரேலியா, கனடா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகளின் பிரதமர்கள் ஒன்றிணைந்து கூட்டாக வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அத்துடன், ரபா மீதான தரைவழி தாக்குதல்களையும் தீவிரப்படுத்துவதாக இஸ்ரேல் மேற்கொண்டுள்ள அறிவிப்பு தொடர்பில் அந்த நாடுகள் கவலை வெளியிட்டுள்ளன.



சுமார் 1.5 மில்லியனுக்கும் மேற்பட்ட பலஸ்தீனர்கள் தற்போது ரபாவில் தஞ்சம் புகுந்துள்ளனர் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மேற்படி பகுதியில் மேற்கொள்ளப்படும் தாக்குதல்கள் பாரிய அழிவை ஏற்படுத்தும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

அழிவுகரமான சூழலை ஏற்படுத்தும் தாக்குதல்களை இஸ்ரேல் மேற்கொள்ள கூடாதென அவுஸ்ரேலியா, கனடா மற்றும் நியுசிலாந்து ஆகிய நாடுகள் கோரியுள்ளன.

உடனடி போர் நிறுத்தம் தற்போது அத்தியாவசியமான ஒன்று எனவும் இது தொடர்பான தனது நண்பர்களின் கோரிக்கைக்கு இஸ்ரேல் செவிமடுக்க வேண்டுமெனவும் மேலும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன், தடுத்து வைக்கப்பட்டுள்ள பணயக்கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமெனவும் கோரப்பட்டுள்ளது.

# பூட்டான் உச்சி மாநாட்டில் ஓட்டமாவடி மாணவி பங்கேற்பு!

(எம்.எம்.றம்ஸீன்)

ஓட்டமாவடி பிரதேச செயலர் பிரிவில் உள்ள நியூ டலண்ட் சிறுவர் கழகத்தின் தலைவி முகம்மது இஸ்மாயில ரணா சுக்ரா பூட்டான் நாட்டில் நடைபெற இருக்கும் சார்க் உச்சி மாநாட்டில் இலங்கையின் பிரதிநிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

இவர் ஏ.ஐ. தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி கதைகூறல் போட்டியில் தேசிய விருது பெற்றதன் அடிப்படையில் சார்க் உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்கான வாய்ப்பு கிடைத்துள்ளது.

முகம்மது இஸ்மாயில் ரணா சுக்ரா ஓட்டமாவடி நியூ டலண்ட் சிறுவர் கழகத்தின் தலைவியும் கோறளைப் பற்று மேற்கு பிரதேச செயலக சிறுவர் சபையின் செயலாளரும் மட்டக்களப்பு மாவட்ட சிறுவர் சபை செயலாளரும், தேசிய சிறுவர் சபையின் இணைச் செயலாளருமாவார்.

ஓட்டமாவடி பாத்திமா பாலிகா மகா வித்தியாலய மாணவியான முகம்மது இஸ்மாயில் ரணா சுக்ரா பூட்டான் நாட்டில் நடைபெற இருக்கும் சார்க் உச்சி மாநாட்டின் ஒரு அங்கமான தெற்காசிய சிறார்கள் எதிர்நோக்கும் சமகால சவால்கள் தொடர்பாக எதிர்வரும் 27, 28 ஆகிய திகதிகளில் இடம்பெறவுள்ள கூட்டத்தொடரில் பங்கு கொள்வதற்காக இலங்கையின் பிரதிநிதியாக செல்லவுள்ளார்.

இவர் ஓட்டமாவடி கோட்ட கல்வி அலுவலக பிரிவில் உள்ள காகிதநகர் மில்லத் வித்தியாலய அதிபரும் எழுத்தாளருமான முகம்மது இஸ்மாயில் (வாழை மயில்) தம்பதிகளின் புதல்வியாவார்.






# பல்கலைக்கழகங்களிடையே அறிவுசார் பரிமாற்ற நிகழ்வு!



(நூருல் ஹுதா உமர், எஸ்.அஷ்ரப்கான்)

பல்கலைக்கழக அறிவுசார் வளங்களை பரிமாறிக் கொள்ளும் நிகழ்ச்சி திட்டத்தின் கீழ் களனி பல்கலைக்கழக புவியியல் துறை மாணவர்களுக்கு ட்ரோன் கேமரா பயன்பாடு மற்றும் தொழில்நுட்பம் தொடர்பான செயலமர்வு நேற்று தென்கிழக்கு பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் புவியல்துறை திணைக்களத்தின் தலைவர் சிரேஷ்ட விரிவுரையாளர் கே. நிஜாமிர் தலைமையில் இடம்பெற்றது.

பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பஸில் வழிகாட்டலில் இடம்பெற்ற செயலமர்வை ஆரம்பித்து வைக்கும் நிகழ்வில் பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் ரமீஸ் அபூபக்கர் கலந்து கொண்டார். இந்த நிகழ்வின் போது களனி பல்கலைக்கழக சமூக விஞ்ஞான பீடத்தின் புவியியல் துறை தலைவர் சிரேஷ்ட பேராசிரியர் லால் மர்வின் தர்மசிறி, பேராசிரியர் ஏ.ஜி. அமரசிங்க உள்ளிட்ட சிரேஷ்ட மற்றும் கனிஷ்ட விரிவுரையாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வின்போது சிரேஷ்ட பேராசிரியர் எம்.ஐ.எம். கலீல், சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எல். பௌசுல் அமீர், கலாநிதி றபீகா அமீர்டீன் , சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.எச். முகம்மட் றினோஸ், விரிவுரையாளர் ஐ.எல். முகம்மட் சாஹிர், விரிவுரையாளர் ஏ.எல். ஐயூப், விரிவுரையாளர் எம்.என். நுஸ்கியா பானு, விரிவுரையாளர் எம்.எச். பாத்திமா நுஸ்கியா, சிரேஷ்ட உதவி பதிவாளர் எம்.ரீ. அஹமட் அஷ்ஹர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

நிகழ்வின்போது நினைவுச் சின்னங்கள் பரிமாறிக்கொள்ளப்பட்டன. பொன்னாடைகளும் போர்த்தப்பட்டன.

